# ஆய்வுக் களஞ்சியம்



பதிப்பாசிரியர்

செல்வி ம.காயத்ரி

என்.ஜி.எம். கல்லூரி.
பொள்ளாச்சி

தமிழ்த்துறை

# ஆய்வுக் களஞ்சியம்

(ஆய்வுக்கட்டுரைத்தொகுப்பு)

தமிழ்த்துறை

நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி(தன்னாட்சி)

தேசிய மீள்தர மதிப்பீடு & மதிப்பேற்றுக் குழுவின் ‘A’ தகுதி பெற்றது

ஐ.எஸ்.ஓ. 2008-2015 தரச்சான்றிதழ் பெற்றது

90, பாலக்காட்டுச் சாலை, பொள்ளாச்சி- 642001.

பதிப்பாசிரியர்

*செல்வி ம.காயத்ரி*

# ஆய்வுக் களஞ்சியம்

பதிப்பாசிரியர் : செல்வி ம.காயத்ரி

பதிப்புரிமை : பதிப்பாசிரியர்

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 2018

வெளியீடு : தமிழ்த்துறை,
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி.

அச்சாக்கம் : அறம் பதிப்பகம்,
ஈரோடு, அலைபேசி: 77088-21464, 85084-84583.
arampathippakam@gmail.com

**ISBN: 978-93-86770-84-4**

Editor's : Selvi M.Gayathri

Copyright's : Editor

First Edition : August- 2018

Published : Department of Tamil,
N.G.M. College, Pollachi.

Printing at : **Aram Book House,**
7A,Veerabhatra 2nd Street,
Sathy Road, Erode-3.
📞 77088-21464, 85084-84583.
✉ arampathippakam@gmail.com

Pages : 118+14=132

Price : 100/-

## உள்ளடக்கம்


| வ.எண் | பெயர் | தலைப்பு | ப.எண் |
|---|---|---|---|
| 1. | சி.அமுதா | - யாழ் - புதிய பார்வை | 1 |
| 2. | ச.கவிதா | - சங்ககாலக் குடும்பம் | 7 |
| 3. | எஸ்.கனகவள்ளி | - வரும் முன் காப்போம் | 13 |
| 4. | ஆ.காமாட்சியம்மாள் | - சிறுகதைகள் | 18 |
| 5. | மு.காமராஜ் | - தமிழக நிகழ்த்துக் கலைகளில் சிலம்பாட்டம் | 21 |
| 6. | ம.காயத்ரி | - திணைமரபு | 26 |
| 7. | கோமதி | - சிறுகதைகள் | 34 |
| 8. | மா.ஜெ.சசிக்குமார் | - சிலம்பக்கலைக்கு ஆதாரங்கள் | 37 |
| 9. | வே.சக்திவேலு | - ஆயிஷா இரா.நடராசன் காட்டும் வகுப்பறை | 41 |
| 10. | சு.சதீஸ்குமார் | - தனி நின்ற தத்துவத்தின் தகை மூர்த்தி | 45 |
| 11. | பா.சதீஷ் குமார் | - சைவத் திருமுறையில் செவிடு என்ற ஊனக்குறிப்பு வெளிப்படும் முறை | 53 |
| 12. | சூர்யா . ர | - விகடன் தடம் இதழில் மனுஷ்யபுத்திரன் பார்வையில் பெண்கள் | 59 |
| 13. | சு.நளினி | - அக இலக்கியங்களில் அஃறிணை உயிரினங்கள் | 65 |
| 14. | அ.நித்யா | - சங்க இலக்கியத்தில் தழை ஆடை | 69 |
| 15. | த.நர்மதா தேவி | - புறநானூற்றில் கொடைத்தன்மையும் அறக்கருத்துக்களும் | 73 |
| 16. | பா.பௌத்ரா தேவி | - புதுமைப்பித்தனின் - பொன்னகரம் - ஆய்வு | 79 |
| 17. | ப.பிரதாப் | - அறஇலக்கியங்களில் கல்விக்கோட்பாடு | 82 |

| | | |
|---|---|---|
| 18. கா.புவனேஸ்வரி | - சங்க கால உணவு முறைகள் | 86 |
| 19. அ.மகபூபு | - சில சங்ககால ஊர்பெயர்களும் அதற்கான காரணங்களும் | 91 |
| 20. மகேஸ்வரி | - சிறுகதை இலக்கியம் | 96 |
| 21. து.விசாலாட்சி | - வா.மு.கோமுவின் சிறுகதைகள் - ஒரு பார்வை | 99 |
| 22. ஜெ. வினோதினி | - குறுந்தொகையில் செவிலி நற்றாய் நிலை | 104 |
| 23. வேணுகோபால் | - வண்ணநிலவன் சிறுகதைகள் உணர்த்தும் சமுதாயப் பதிவுகள் | 107 |
| 24. நா.ஸ்ரீ பிரியா | - நற்றிணையில் பழக்க வழக்கங்கள் | 111 |
| 25. ஷரிமளாதேவி | - காட்டுப் பூக்களின் கானங்கள் | 115 |

# வரும் முன் காப்போம்

**எஸ்.கனகவள்ளி,**
பகுதி நேர முனைவர் ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ந.க.ம.கல்லூரி,
பொள்ளாச்சி.

---

**பெறுதற்கரிய செல்வம்:**

**"பெருமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற"**

(குறள் - 61)

என்னும் வள்ளுவர் வாக்கின்படி பெறுகின்ற செல்வங்களாகியவற்றுள் அறிவறிந்த மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்ததாக பிற எச்செல்வத்தையும் யாம் கருதுவதில்லை என்பதை அறியலாம்.

இக்குறட்பாவிற்கேற்ப இல்லறம் நல்லறமாக அமைய வேண்டுவது பண்பிற்சிறந்த மக்கட்பேறு ஆகும். ஒவ்வொரு குழந்தைகளின் முதல் ஆசிரியராக விளங்குபவர் பெற்றோரே ஆவர். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தை கருவுற்ற காலம் முதலே நற்சிந்தனையையும் மனமகிழ்வையும் தரும் சூழலை ஏற்படுத்துவது அக்குடும்பத்தாரின் கடமையாம். மேலும் சுகாதாரமான முறையிலான சரிவிகித உணவும், தூய்மையான உடையும், காற்றோட்டமான உறையுள்ளும், ஆரோக்கியமான மருத்துவ உதவியும் அளித்து கர்ப்பிணியைப் பேணிக்காத்தல் வேண்டும்.

பிறந்த குழந்தையின் ஒவ்வொரு செயலையும் உற்றுநோக்கி, அவற்றின் தேவையை முழுமையாக நிறைவேற்றுவதில் பெற்றோரின் பங்கு அளப்பரியது. குழந்தைகளை எச்சூழலிலும் தனிமைப்படுத்தாது அவர்களுடனிருந்து செயலாற்றி குழந்தைகளின் கனவை நனவாக்க வேண்டும்.

ஒருபோதும் நம்முடைய கனவை வலுக்கட்டாயமாக குழந்தைகளின் மீது திணிக்க முற்படக்கூடாது.

"எந்தகுழந்தையும் நல்லகுழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே - அவர்
நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பதிலே"

**குறைவற்ற செல்வம்**

**"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"**

என்னும் பழமொழியின்வழி நாம் நோயற்ற வாழ்வின் அவசியத்தை உணரலாம்.

நாம் வாழும் இவ்வுலகில் நோய்களின் தாக்கம் அதிகமாக இருப்பதைக் கண்கூடாகக் காண்கிறோம். இதற்கான காரணத்தை பின்வரும் நாமக்கல் கவிஞரின் பாடல் வரிகள் நமக்கு தெளிவாக உணர்த்துகின்றன.

**"கும்மி யடிபெண்ணே கும்மிய டிகுல**
**தெய்வத்தைக் கும்பிட்டுக் கும்மியடி**
**நம்முடைத் தேசத்தில் நோய்களில் லாமலே**
**நாடு செழித்திட வேணுமென்று**
**சுத்த உணவிலும் சுத்த உடையிலும்**
**சொன்ன விதிகளை விட்டு விட்டோம்**
**நித்தங் குளிப்பதும் பத்தியங் காப்பதும்**
**மெத்தக் குறைந்தது தேசத்திலே"**

**"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின்" (குறள் - 942)**

எனும் குறட்பாவிற்கிணங்க முன் உண்டது செரித்ததைத் தெளிவாக அறிந்து, அதன் பின்னரே உண்பானானால், அவனுடைய உடலுக்கு மருந்து என்னும் எதுவுமே வேண்டாம்.

**'சுற்றுப்புறத் தூய்மை, தருமே நோயற்ற தன்மை!'**

என்பதை மனத்திலிருத்தி தூய்மைச் சிந்தனையைச் செயல்படுத்தி வீடு, தெரு, ஊர், நாடு, உலகம் என விரிவுபடுத்த வேண்டும்.

மரங்களை நட்டு பசுமை உலகை அமைப்பதின்மூலம் தூயகாற்று, சுத்தமானநீர், உணவு போன்றவற்றைப் பெற இயலும். இயற்கைவளமே, 'ஓரறிவுயிர் முதல் ஆறறிவுயிர் முடிய' உள்ள அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரம் என்பதை உயிர்மூச்சாகக் கொண்டு, இயற்கைச் சீரழிவுக்கு நாம் காரணமாகாமல் இயற்கையோடு இணைந்து நோயற்ற வாழ்வு வாழ்வோமாக!

**"இயற்கையைப் பேணுவோம், உயிரினத்தைக் காப்போம்"**

**அழிவற்ற செல்வம்:**

**"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்" (குறள் - 69)**

என்னும் குறட்பாவில் திருவள்ளுவர் கூறும் கருத்து என்னவென்றால், தன் மகனைச் சான்றோன் என்று பலரும் போற்றுவதைக் கேள்வியுற்ற தாய் அம்மகவைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்வைக் காட்டிலும் பெரிதும் மகிழ்வாள் என்பதாகும். இதிலிருந்து சான்றாண்மையைத் தன்மையைத் தரும் கல்வியின் அவசியத்தை உணரலாம்.

**"சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே"**

ஆதலால், தம் குழந்தையை வளர்ப்பதில் அன்னையும் கல்வி முதலான உலகியலறிவைப் பெறச்செய்வதில் தந்தையும் மிகமிக இன்றியமையாத இடத்தை வகிக்கின்றனர்.

பள்ளிக்கு வரும் குழந்தைகளுக்கு வீட்டுச்சூழலை ஏற்படுத்தி அவரவரின் திறமைகளை வெளிக்கொணர்வது ஆசிரியர்களின் தலையாய கடமையாகும். பள்ளியில் குழந்தைகளின் முன்னேற்றம் மற்றும் பின்னடைவு, அவற்றிற்கான காரணங்கள்: தேவைப்படும் வழிகாட்டுதல்களைப் பற்றி அவ்வப்போது பெற்றோர்களிடம் தெரியப்படுத்துதல் அவசியம். நாள்தோறும் வேளை தவறாமல் சரிவிகித உணவளிப்பதுடன் கற்றலை கண்காணிப்பதிலும் அன்றாட நிகழ்வுகளைப் பகிர்ந்துகொள்வதிலும் பெற்றோர் தமது நேரத்தை குழந்தைகளுக்காக ஒதுக்குதல் வேண்டும்.

இவ்வகையிலான செயல்முறைகள் அன்றாடம் நடைமுறைப் படுத்தப்படுமேயானால் ஆளுமைத்திறன் மிக்க, மீத்திறன் மிக்க, சமூகவியல்பு நிறைந்த இளைய சமூகத்தை உருவாக்க இயலும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனலாம்.

**சேர்க்க வேண்டிய செல்வம்**

ஆதிமனிதன் உணவைத் தேடிப் பயணித்தான். பிறகு மனிதன் ஆற்றங்கரை சமவெளியில் உழவுத்தொழில், மாடுமேய்த்தல் மூலமாக கிராம வாழ்வை அமைத்துக் கொண்டான். நெருப்பு, சக்கரம் போன்றவற்றைக் கண்டுபிடித்து உணவைச் சமைத்து உண்ணவும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு பயணிக்க வண்டி வாகனங்களைக் கண்டுபிடித்து பயன்படுத்தினர். அறிவியல் கண்டுபிடிப்புகளின் வளர்ச்சியால் நீர், நிலம், ஆகாயம் போன்ற வழிகளைப் பயன்படுத்தி பயணிப்பதின் மூலமும், இணையம் மூலமாகவும் உலகமே சுருங்கிவிட்டது.

இந்நிலையில் எவரும் தனிமனித வாழ்வு வாழ முடியாது என்பதை கீழ்க்காணும் பழம்பாடல் விளக்குகிறது.

**“ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு:**
**நம்முள் ஒற்றுமை நீங்கினில்,**
**அனை வர்க்கும் தாழ்வு”**

இதை மனதிற்கொண்டு சமூக வாழ்வை வாழ்வதற்கான ஆயத்தத்தை ஏற்படுத்தும் வகையில் குடும்பமும் பள்ளியும் குழந்தைகளை சமூகவியல் பினன் ஆக்குதலை குறிக்கோளாகக் கொண்டு செயலாற்ற வேண்டும். அவ்வாலமரத்தில் பெரியோரை மதித்தல், நாட்டுப்பற்றை வளர்த்தல், மனிதநேயத்தை கடைபிடித்தல், சமத்துவம் சகோதரத்துவம் போன்ற அரசியலமைப்பு விதிகளை மதித்து நடத்தல், சாலை விதிகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றை தூண்களாக்கிடுதல் அவசியம்!

**“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு”**

**"சென்றிடுவீர் எட்டுதிக்கும்,**
**கலைச்செல்வங்கள் யாவும்**
**கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"**
**"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்**
**தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்**
**இரவாத புகழுடைய புதுநூல்கள்**
**தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"**

என்னும் ஆன்றோர் வாக்குகளைக் கருத்திற்கொண்டு பிறநாட்டு படைப்புகள், கண்டுபிடிப்புகள், போன்ற கலைச்செல்வங்கள் அனைத்தையும் கற்றறிந்து நம் நாட்டிற்குப் பயன்படச் செய்தல் வேண்டும். நம் நாட்டிலேயே அறிவியல், வானியல் போன்ற பல்துறை ஆய்வுகளை மேற்கொண்டு, உலக அரங்கில் "நாம் இந்தியர்" என்னும் உணர்வு மேலோங்கிட, உயர்வு பெற்றிட பாடுபடுவோமாக!

**பாதுகாக்கப்பட வேண்டிய செல்வம்**

ஆயகலைகள் அறுபத்து நான்கு பற்றி கேள்விப்பட்டு இருக்கிறோம். அக்கலைகளைப் பற்றி அறிந்துகொண்டு, அவற்றை அழியாமல் காத்து, நம் சந்ததியினர் பயன்பெறும் முறையிலான வாய்ப்பை ஏற்படுத்துவது நம் கடமையாகும். ஆயகலைகளின் தொகுப்பு பின்வருவனவாம்.

1. எழுத்திலக்கணம்
2. எழுத்தாற்றல்
3. கணிதம்
4. மறைநூல்
5. தொன்மம்
6. இலக்கணம்
7. நயநூல்
8. கணியம்
9. அறநூல்
10. ஓகநூல்
11. மந்திரநூல்
12. நிமித்திகநூல்
13. கம்மியநூல்
14. மருத்துவநூல்
15. உறுப்பமைவுநூல்
16. மறவனப்பு
17. வனப்பு
18. அணிநூல்
19. மதுரமொழிவு
20. நாடகம்
21. நடம்
33. மண்ணியல்
34. போர்ப்பயிற்சி
35. மல்யுத்தம்
36. கவர்ச்சி
37. ஓட்டுகை
38. நட்புப்பிரிப்பு
39. காமநூல்
40. மயக்குநூல்
41. வசியம்
42. இதளியம்
43. இன்னிசைப்பயிற்சி
44. பிறவுயிர்மொழியறிகை
45. மகிழுறுத்தம்
46. நாடிப்பயிற்சி
47. கலுழம்
48. இழப்பறிகை
49. மறைத்ததையறிதல்
50. வான்புகவு
51. வான்செலவு
52. கூடுவிட்டுக் கூடுபாய்தல்
53. தன்னுருக்கரத்தல்

22. ஒலிநுட்ப அறிவு
23. யாழ்
24. குழல்
25. மதங்கம்
26. தாளம்
27. விற்பயிற்சி
28. பொன்நோட்டம்
29. தேர்ப்பயிற்சி
30. யானையேற்றம்
31. குதிரையேற்றம்
32. மணிநோட்டம்
54. மாயச்செய்கை
55. பெருமாயச்செய்கை
56. ஆழற்கட்டு
57. நீர்க்கட்டு
58. வளிக்கட்டு
59. கண்கட்டு
60. நாவுக்கட்டு
61. விந்துக்கட்டு
62. புதையற்கட்டு
63. வாட்கட்டு
64. சூனியம்

மேலும், தொல்பொருள் ஆய்வின் மூலமாக கண்டெடுக்கப்படும் கிடைத்தற்கரிய பழம்பொருள்களையும் காத்தல் நமது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

"மூத்தோர் சொல்வார்த்தை அமிர்தம்" என்பதற்கேற்ப அவர்களின் சொல்லிற்கு மதிப்பளித்து, நம்மை ஆளாக்கிய அவர்களைக் காத்துநிற்க வேண்டியது இளையசமுதாயத்தினரின் கடமை என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!

❖




அன்ன மாவே மண்ணோடு கிளியே
இல்லி குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

ISBN: 978-93-86770-84-4

அறம் பதிப்பகம்